# பெரம்பலூர் நகராட்சி

## 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் – 29-ம் நாள் வெள்ளிக்கிழமை

## காலை 11.00 மணிக்கு பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

## தலைமை : தனிஅலுவலர் (ம) ஆணையாளர்

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 29.10.2021 | **பொருள் 01 :** பெரம்பலூர் நகராட்சி ஆணையர் அவர்களது அக்டோபர் 2021 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் பதிவு செய்யலாம். | நகர்மன்றத் தீர்மான எண். 634<br>பதிவு செய்யப்பட்டது |
| 29.10.2021 | **பொருள் 02 :** பெரம்பலூர் நகராட்சி பொறியாளர் அவர்களது அக்டோபர் 2021 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் பதிவு செய்யலாம். | நகர்மன்றத் தீர்மான எண். 635<br>பதிவு செய்யப்பட்டது |
| 29.10.2021 | **பொருள்03:** இந்நகராட்சியின் பொது சுகாதார உபயோக பயன்பாட்டிற்கு கொசு மருந்து அடிப்பதற்கு 400 லிட்டர் பைரத்திரம் 2% Extract வாங்கி வழங்க கோரி இந்நகராட்சி துப்புரவு ஆய்வர்கள் குறிப்பில் கோரியுள்ளனர். எனவே பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்டவாறு புகை மருந்து வாங்குவதற்கும், அதனை தமிழ்நாடு மருத்துவ கழக நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ. 5,50,000/– க்கு (ரூபாய் ஐந்து லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனும தி பெற்று கொள்முதல் செய்து நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 5580/எச்1/2021** | நகர்மன்றத் தீர்மான எண். 636<br>பதிவு செய்யப்பட்டது |

<table>
<tr>
<td>29.10.2021</td>
<td>
பொருள்04: இந்நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று நோயின் பரவலை கட்டுப்படுத்தும் பணிக்காக நகராட்சியின் அனைத்து வார்டு பகுதிகளிலும் கிரிமி நாசினிகள் தெளித்து தூய்மையாக பராமரிக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர்களின் குறிப்பில் கிரிமி நாசினிகளின் இருப்பு குறைவாக உள்ளதாகவும் கீழ்கண்ட கிரிமி நாசினிகள் வாங்கி வழங்கவும் கோரியுள்ளனர்.
<table>
<tr><th>வ. எண்</th><th>கிரிமி நாசினி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள்</th><th>தேவையான அளவு</th></tr>
<tr><td>1.</td><td>ப்ளீச்சிங் பவுடர்</td><td>5000 லிட்டர்</td></tr>
<tr><td>2.</td><td>சுண்ணாம்பு நீர்</td><td>10000 லிட்டர்</td></tr>
</table>
மேற்கண்டவாறு கிரிமி நாசினிகள் வாங்குவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.4,00,000/– த்தினை (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற The Amuthasurabhi Agriculture, Health, Public Health Sanitation, Multipurpose Marketing and Services Industrial Co-op. Society Ltd, Thanjavr நிறுவனத்திடம் கொள்முதல் செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
<u>ந.க.எண். 5581/எச்1/2021</u>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 637 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>29.10.2021</td>
<td>
பொருள்05: இந்நகராட்சியில் வருவாய் நிதி 2020-2021 ம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட ஆலாம்பாடி கிழக்கு மற்றும் மேற்கு திறந்த வெளி கிணறு , அரணாரை கிழக்கு மற்றும் மேற்கு ஏரி கிணறுகள் செங்குணம் மேற்கு கிணறு , தெப்பகுளம் வடக்கு மற்றும் தெற்கு திறந்த வெளி கிணறுகளில் உள்ள கம்பி வலைகள் சேதமடைந்து உள்ளதால் அவற்றை சரி செய்யும் பணிக்கு ரூ. 9.80 இலட்ச மதிப்பீட்டிலும் , ஒடச்சகுளம் மேற்கு திறந்த வெளி கிணறு , துறைமங்கலம் ITI பின்புறம் உள்ள கிணறு , KVK மேற்கு பகுதியில் உள்ள கிணறு, அரசு குடியிருப்பு கிழக்கு மற்றும் மேற்கு கிணறுகள் மற்றும் அசோக் நகர் திறந்த வெளி கிணறுகளில் உள்ள கம்பி வலைகள் சேதமடைந்து உள்ளதால் அவற்றை சரி செய்யும் பணிக்கு ரூ. 9.90 இலட்ச மதிப்பீட்டிலும் , மற்றும் உப்போடை மேற்கு பகுதியில் உள்ள இரண்டு திறந்த வெளி கிணறு, அராணரை பெரிய ஏரி கிணறு, ஆலாம்பாடி கிணறு மற்றும் கலெக்டர் ஆபிஸ் திறந்த வெளி கிணறுகளில் உள்ள கம்பி வலைகள் சேதமடைந்து உள்ளதால் அவற்றை சரி செய்யும் பணிக்கு ரூ. 9.85 இலட்ச மதிப்பீட்டில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு 30.07.2020 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு வேலை உத்தரவு 31.07.2021 ம் தேதி மன்றத்தின் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது வரை மேற்படி ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டும், செங்குணம் கிழக்கு மற்றும் மேற்கில் உள்ள 2 கிணறுகள் , அரணாரை பெரிய ஏரி , கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் உள்ள 3 கிணறுகள் , ஆலம்பாடி சாலை கிழக்கு மற்றும் மேற்கில் உள்ள 2 கிணறுகள், அரசு அலுவலர் குடியிருப்பு கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் உள்ள 2 கிணறுகள் , ஒடச்சகுளம் பகுதியில் உள்ள 1 கிணறு மற்றும் உப்போடை மேற்கு பகுதியில் உள்ள 1 கிணறு ஆகிய 14 கிணறுகளில், ITI பின்புறம் உள்ள கிணறு , KVK மேற்கு பகுதியில் உள்ள கிணறுகளில் மட்டும் பணி முடிவடைந்துள்ளது. மற்ற ஏணைய கிணறுகளில் பணிகள் செய்யப்படாமல் உள்ளது. எனவே இப்பணிகளை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
<u>ந.க.எண். 004024/2021/ இ1</u>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 638 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

// ஓம் // திரு . S. குமரிமன்னன்
தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
பெரம்பலூர் நகராட்சி